IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 35/2016

Deposition of Witness : PW 1

Name : மூர்த்தி (வயது – 70)

Father's Name /W/o : த/பெ சுப்பிரமணி

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 14.07.2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் எந்த வருடம் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் 1997 வருடத்தில் போலாச்சியம்மாள், குணாம்மாள், வாசுகி மற்றும் அனுசுயா ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 3 கிரையபத்திரத்தில் உள்ள சொத்து போலாச்சியம்மாள் வகையறாவிற்கு சொத்து எந்த ஆவணத்தின் மூலம் வந்தது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் சரிதான். போலாச்சியம்மாள் வகையறாவிற்கு சொத்து எவ்வாறு வந்தது எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. போலாச்சியம்மாள் வகையறாவிற்கு சொத்து எவ்வாறு வந்தது என்ற ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேனா என்றால் ஆம். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு போலாச்சியம்மாள் வகையறாவிடம் சொத்து எவ்வாறு வந்தது என்ற ஆவணம் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. வில்லங்க சான்றிதழில் சொத்து போலாச்சியம்மாள் வகையறா பெயரில் இருந்தது. போலாச்சியம்மாள் வகையறாவிற்கு சொத்து எவ்வாறு வந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. நான் வருவாய் துறையில் எழுதி கொடுத்துள்ளேன். நான் வருவாய் துறையில் என் பட்டா வழங்குவதற்கு விண்ணப்பித்த ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1934 ஆண்டு பாகப்பிரிவினை பத்திரம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் போலாச்சியம்மாள் வகையறாவிற்கு சொத்து எவ்வாறு வந்தது என்தை காண்பிப்பதற்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் அசல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1934 ஆம் ஆண்டு போலாச்சியம்மாள் வகையறாவிற்கு எந்த பாகம் அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா சர்வே எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் தெரியாது.